Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


# Lives of Women in Epic Literature

**V. Merina Maju**, Reg. No.: 241131501027, Ph.D Researcher, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil, Affiliated Manonmaniam Sundaranar University, Tirunelveli - 627 012, Tamil Nadu, India.
**Dr. A. Ponnammal,** Associate Professor of Tamil, S.T. Hindu College, Nagercoil, Affiliated Manonmaniam Sundaranar University, Tirunelveli - 627012, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0002-1127-6785**
**DOI: 10.5281/zenodo.14752527**

## Abstract

*The epics are a treasure of verses that show the truths of the ancient civilization of a country before the eyes of the people who have come after it for a long time. The meaning of these epics is that they are life-like paintings that illustrate the truths. The Tamil epics that narrate the ancient history of Tamil Nadu are "Silappadhikaram" and "Manimekalai". There are many epics in the Tamil language. However, the five major epics namely Silappadhikaram, Manimekalai, Jeevaga Chinthamani, Valyapathi and Kundalakesi are special. Of these, Silappadhikaram and Manimekalai embrace the history of Tamil Nadu. In this, the protagonist of Silappadhikaram is Kannagi, and the protagonist of Manimekalai is Manimekalai. These two epics have been made into epics focusing on women. The purpose of this essay is to explain the life situations of Kannagi, Manimekalai, Manimekalai's mother and Madhavi, who are the heroines of the epics Silapathikaram and Manimekalai. The life stages mentioned in this are entwined with the life stages of Kannagi, Madhavi and Manimekalai. Manimegalai is an epic which is a continuation of Silapathikaram. This article studies the lives of women in Tamil epic literature.*

**Keywords:** Biography, Women, *Manimekalai*, Madhavi, Kannagi, *Silapathikaram*.

## References

[1] Azhaku Krishna B. *Silappathikaram Kattum Panpadum Samuthaya Varalarum.* Iynthinai Pathippagam, 1988.
[2] Sivagnanam, M. P. *Silappathikar Thiranayvu*. Poonkodi Pathippagam, Mayilappoor, Chennai. 1999.
[3] Sivagnanam, M. P. *Silappathikar Aayvurai*. Poonkodi Pathippagam, Mayilappoor, Chennai. 2001.
[4] Somasundaranar, P. V. Pulavar. *Silappathikaram Mulamum Uraium*. Thirunelveli Thenninthiya Saivasithantha Noorpathippu Kalagam Limited, Chennai.
[5] Dasan, M. Pulavar. *Tholkappiya Kalansiyam Porulathikaram* - Pakuthi-1. Apila Pathippakam, Kanyakumari.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


# காப்பிய இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல்

**வா. மெரினா மஜீ**, பதிவு எண்: 241131501027, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627 012, தமிழ்நாடு, இந்தியா.
**முனைவர் அ. பொன்னம்மாள்**, இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627 012, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0002-1127-6785
DOI: 10.5281/zenodo.14752527

**ஆய்வுச்சுருக்கம்**

*காப்பிய இலக்கியங்களாகிய சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையில் காப்பிய தலைவியாக இடம்பெறும் கண்ணகி, மணிமேகலை, மணிமேகலையின் தாய், மாதவி இவர்களின் வாழ்வியல் நிலைகளை விளக்கி கூறுவதே இவ்வாய்வு காட்டுரையின் நோக்கமாகும். இதில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் நிலைகளும் கண்ணகி, மாதவி, மணிமேகலையின் வாழ்வியல் நிலைகளும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளது. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியே மணிமேகலை காப்பியமாகும். மணிமேகலைக்கு வேண்டிய கதை கரு சிலப்பதிகாரத்திலே தோன்றியுள்ளது எனலாம்.*

**குறிப்புச்சொற்கள்:** காப்பியங்கள், பெண்கள், வாழ்வியல், மணிமேகலை, கண்ணகி, சிலப்பதிகாரம்.

**முன்னுரை**

ஒரு நாட்டின் பண்டைய நாகரிகத்தின் இனிய உண்மைகளை நெடுங்காலத்திற்குப் பின்வரும் மாந்தரின் கண்முன்னே காட்டும் கருவூலம் தொடர்நிலைச் செய்யுளாகிய காப்பியங்களேயாகும். அக்காப்பியங்களின் பொருள் உண்மைகளை எடுத்துரைக்கும் உயிர் ஓவியங்களாகும். தமிழ் நாட்டின் தொன்மை வரலாற்றினை எடுத்துக் கூறும் காப்பியங்கள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தமிழ் மொழியில் காப்பியங்கள் பல உள்ளன. எனினும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐம்பெருங்காப்பியங்கள் சிறப்புமிக்கவையாக உள்ளன. இதில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தமிழ்நாட்டு வரலாறு தழுவிய காப்பியங்களாம். இதில் சிலப்பதிகாரத்தின் காப்பியத்தலைவி கண்ணகி, மணிமேகலையின் காப்பியத்தலைவி மணிமேகலை. இவ்விருகாப்பியங்களுமே பெண்களை மையமாகக் கொண்டு காப்பியமாக்கப்பட்டுள்ளது. ஆகவே காப்பிய இலக்கியமாகிய சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையில் பெண்களின் முக்கியத்துவம் இன்றியமையாததாக உள்ளது. இக்காப்பியங்களின் அடிப்படையில் வாழ்வியலைப்பற்றி விளக்கமாக காண்போம்.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


**மாதவியின் பெருந்தகைமை**

கலைகள் அனைத்தையும் கற்றுக் தேர்ந்து 'தலைக்கோலி' என்னும் சிறப்பு பெயரோடு ஆயிரத்தி எட்டு பொற்கழஞ்சியங்களையும் சோழ மன்னனிடமிருந்து பரிசாகப் பெற்றவள். கலையில் சிறந்து விளங்கிய மாதவியை காதலித்து கண்ணகியை மறந்து மாதவியுடன் கூடி வாழ்ந்த கோவலன் யாழிசை வாயிலாக ஊழ்வினை உருத்துவந்தூட்டிய பொழுது கோவலன் கடற்கரையிலேயே மாதவியை கைவிட்டு சென்றான். கோவலனுக்கும், கண்ணகிக்கும் நேர்ந்த கொடுந்துயரத்தை மாடலன் வாயிலாக கேட்டபின்னர் மிக்க துயரம் அடைந்தாள்.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்திரவிழாவில் நடைபெறும் மாதவியின் நாட்டியம் நடைபெறாமல் போவதற்கு மாதவியின் வாழ்க்கை முறையே காரணம் என்று ஊர்மக்கள் பழிச்சொற்கள் கூறினர் அவற்றை கேட்டு மாதவி வருந்தாமையின் பொருட்டு, வயந்தமாலை "பழிக்குரிய செயல்களையே நீ செய்திருக்கிறாய் ஆதலின் நீ அதற்கு நாணவே வேண்டும். ஆனால் நீயோ நாணாமல் இருக்கின்றாய்" என்று கூறினாள். இதனை,

**பலர்தொருபுரைக்கும் பண்பில் வாய்மொழி,**
**நயம்பா டில்லை நாணுடைத்து (சிலப்பதிகாரம்)**

எனும் சிலப்பதிகாரப் பாடல் வரிமூலம் அறியலாம். இதைகேட்ட மாதவி "மற்ற சில பெண்களைப் போலவே நானும் கற்புடையவளாகவே இரு;க வேண்டும் என்ற கோட்பாட்டோடுதான் அந்த பெருங்குடி மகனோடு (கோவலனோடு) செருக்கோடு வாழ்ந்;திருந்தேன். ஆனால் நான் நினைத்தபடி கற்புடையவளாய் இருந்திருந்தால் என் காதலர் இறந்த செய்தி கேட்ட பொழுதே என் உயிர் இவ்வுடலைவிட்டு போயிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு போகவில்லையே நான் என்ன செய்வேன்? என்பதே உண்மையாயிற்று. பலர் கூடி என்னை பழிச்சொல்வதும் ஏற்புடையதாகும். இருப்பினும் கோவலனுக்கு கோவலனுக்கு பிறந்த மகளாகிய மணிமேகலையை ஊரார் போற்றும்விதமாக வளர்த்து அவளை கற்புடையவளாகவும், பக்தியுடையவளாகவும் அற ஒழுக்கத்தில் சிறந்தவனாகவம் உருவாக்குவதே என் நோக்கம்" என்று தனது தோழி வயந்தமாலையிடம் கூறினாள். இதிலிருந்து மாதவியின் தனித்திறத்தை அறிந்துகொள்ள முடியும். மேலும்

**சிறப்பில் குன்றாச் செய்கையோடு பொருந்தியா**
**புற்பில் குன்றா பெருந்தோள் மடந்தை**
**தாதவிழ் புரிகுழல் மாதவி தன்னை**
**ஆடலும் பாடலும் அழகும் என்றிக்**
**கூறிய மூன்றின் ஒன்று குறைவுபடாமல்**
**ஏழாண்டு இயற்றி (சிலப்பதிகாரம் அரங்கேற்றுக்காதை, பா. 5)**

என்று மாதவியின் சிறப்பை இளங்கோவடிகள் எடுத்துரைக்கின்றார். கடவுளாய்ச் சிறந்தாள் ஒருவள். கணிகையர் குலத்துள் கற்பில் சிறந்தாள் ஒருவள். இவ்வாறு இரு பெண்களை

மையமிட்டு ஒருமுழு வரலாற்றை காப்பியமாக அளித்தவர் இளங்கோவடிகள். இந்த காப்பியம் முழுவதும் பெண்ணின் சிறப்பை வலியுறுத்தி அமைந்துள்ளது.

**ஐம்பெருங்காப்பியங்களில் பெண்களின் வாழ்வியல்**

காப்பிய உலகில் ஐம்பெருங்காப்பியங்கள் என்று புகழப்படும் சீவகசிந்தாமணி சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி எனும் ஐந்து காப்பியங்களுமே பெண்களை மையமிட்ட காப்பியங்களாகவே விளங்குகிறது. 'மணநூல்' என்றழைக்கப்படும் சீவகசிந்தாமணியில் எட்டுபெண்களை மணந்ததாக கூறப்படும் கருத்திற்கு அப்பாற்பட்டு நோக்குகையில் அப்பெண்களை மணந்து அதன்வழி பெற்ற உதவிகளை காப்பியம் விரித்துரைப்பதைக் காணமுடிகிறது. இந்த காப்பியம் முழுவதும் பெண்களை மையமிட்டே அமைகிறது. சீவகனை சுடுகாட்டில் பெற்றெடுக்கும் விசையை வரை காப்பியம் முழுவதும் பெண்களே நிறைந்திருப்பதை உணர்த்துகிறது. மேலும் ஓடும் நதி முதல் வணங்கும் தெய்வம் வரை பெண்கள் பெயரே முதன்மைப்படுத்துவதைப் போல சீவகன் பகைவரை வென்று நாட்டை மீட்ட செயலைக் குறிப்பிடும் போது சீவகன், 'மண்மகளை மணந்தான்' என்றும் முடிசூடிய நிகழ்ச்சியை 'பூமகளை மணந்தான்' என்றும் ஞானம் பெற்று முக்திநிலையை அடைந்ததை 'கேவல மடந்தையை மணந்தான்' என்றும் கல்வி, நாடு, முக்தி என அனைத்தையும் பெண்மையின் அங்கமாகவே காப்பியங்கள் எடுத்துரைப்பதை அறியமுடிகிறது. வளையாபதியும், குண்டகேசியும் பெண்மையை முன்னிறுத்தியே காப்பியத்தை நகர செய்கின்றன.

**கண்ணகியின் வாழ்வியல் நிலை**

தொல்காப்பியர் குறிப்பிடும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நால்வகைப் பண்பு நலன்களை பெண்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. பொறுமை பெண்டிர்க்குரிய குணங்களுள் ஒன்றாகும். 'பொறை' எனப்படுவது மென்மையான மனத்துடன் பொறுத்துப்போகும் பண்பாகும்' இப்பொறையுடைமை கண்ணகியிடம் இருந்ததால் இளங்கோவடிகள்,

**போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்**
**தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்**
**மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்**
**காதலன் யெர் மன்னுங் கண்ணகியென்பாள் மன்னோ (சிலம்பு மங். வாழ்., பா. 1: 26-29)**

என்று பாராட்டப்படுகிறாள். மேலும், கண்ணகி போதிலார் திருவினாள்' என்றும். 'புகழுடை வழவென்றும் அடயாளம் காட்டப்படுகிறார். மேலும் தீதிலா வடமீனின் திறம் இவள்திறம்' என்றும் 'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்' என்றும் பாராட்டப்படுகிறாள்.

மேலும் செல்வச்செழிப்பில் வாழ்ந்தவள் கண்ணகி. கணவன் அவளைவிட்டுப் பிரிந்து மாதவியின் பால் வாழ்ந்தபோது அப்பிரிவைத் தாங்கியவள். கோவலன் வந்து 'வருகென'

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


அழைத்ததும் மறுமொழி எதுவும் கூறாமல் உடனே சென்றவள். அவனுடன் காடுமேடுகளை கடந்து சென்றவள் கவுந்தியடிகள் அடைக்கலமாகத் தந்த மாதரியின் மகள் ஐயை வீட்டில் உணவு சமைத்தும் பரிமாறி பல்வேறு பணிகளை கணவனுக்காகச் செய்து மகிழ்நதவள். மனச் சுமைகளைக் கூட சுகங்களாக சுமந்து வாழ்ந்த கண்ணகி பெண்களிலேயே சிறப்பானவள் என்றால் அது மிகையாகாது.

**தொல்காப்பிய கால பெண்கள் வாழ்வியல் நிலை**

பெண்கள் என்பவர்கள் சிறந்த பண்புடன் விளங்க வேண்டும் என்பதை தொல்காப்பியர்

**கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் என்ன கிழவோள் மாண்புகள் (தொல்., 1098)**

என்று வரையறுத்துள்ளது.

ஆரம்ப காலங்களில் ஆணுக்கு நிகராகப் பெண்களும் செயல்பட்டனர். ஆனால் இயற்கையாக உடல் ரீதியான மாற்றங்களில் ஆண், பெண் ஆகிய இருவருக்குமான தொழில் வேறுப்பட்டன. 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்ற நிலை உருவானது. கடல் கடந்து செல்வது பெண்ணுக்கு தடை செய்யப்பட்டது. வாழுகின்ற இடத்திலேயே சிறுசிறு வேலைகளைச் செய்து வந்திருக்கின்றனர். இல்லத்தை ஆள்பவளாக அவள் தொடர்ந்து செயல்பட்டிருக்கிறாள். பெண்ணின் உயிரைவிட நாணம் பெரியது. ஆதனைவிட அவளது கற்பு மிக உயர்வானது. இதனை தொல்காப்பியர்

**உயிரினும் சிறந்தன்று நாளே நானினும்**
**செய்தீர் காட்சி, கற்பு சிறந்த றெனத்**
**தொல்லோர் கிளவி (தொல்., 1059)**

எனும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

காப்பியங்களைப் பொறுத்தவரையில் தொடர்நிலைச் செய்யுளாக அமைந்து சமூகத்திற்கு நன்மை பயக்கும் ஒரு கருத்தை கூற விளையும் போது அவ்வில்ககியம் பெண்மையை முன்னிறுத்தியதாகவே அமைவது காணமுடிகிறது. பெண்ர்மை மையமிட்டு உலகம் இயக்கம் அமைவதை இக்காப்பியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும் இக்காப்பியங்கள் அவை தோன்றிய காலத்தில் காணப்பட்ட பெண்களின் நிலையை எடுத்துரைப்பதாகவும் கருதலாம். ஆண், பெண் இருபாலரில் பெண்மைக்கே முக்கியத்துவம் கொடுத்து சிற்பபித்திருப்பதை அறியமுடிகிறது. இவ்வாறு பெண்களை மையப்படுத்தும் படைப்புகளை காலந்தோறும் வரவேற்புக்குரியதாக இருந்திருக்கிறது. இந்த முதன்மைப்படுத்துதலால் இக்காப்பியங்கள் இன்றளவும் பெருமையாகப் பேசப்படுகின்றன.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

### குறிப்புகள்

[1] அழகு கிருஷ்ணன் பொ. *சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும்.* ஐந்திணை பதிப்பகம். 1988 .

[2] சிவஞானம், ம. பொ. *சிலப்பதிகாரத் திறனாய்வு.* பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை. 1999.

[3] சிவஞானம், ம.பொ. *சிலப்பதிகார ஆய்வுரை.* பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை. 2001.

[4] சோமசுந்தரனார், போ. வே, புலவர். *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்பு கழகம் லிமிடெட், சென்னை-1.

[5] தாசன், மு, புலவர். *தொல்காப்பிய களஞ்சியம் பொருளதிகாரம் பகுதி – 1.* அபிலா பதிப்பகம் குமரி.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.